## முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

COS.No.38/2023 பெயர் : மகேஷ்குமார் நாள் : 19.06.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் M.E பட்டதாரி. கார்வேம்பு டெக்ஸ்டைல்ஸ் முத்தூரில் புரொடெக்சன் மேலராளராக கடந்த 5 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020-ம் ஆண்டிலிருந்து பணிபுரிந்து வருகிறேன். நான் சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனது பெயரில் 2 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. நான் நிரந்தரமாக ஈரோடு, திண்டலில் வசித்து, தினமும் வேலைக்கு சென்று வருகிறேன். நானும், சூரம்பட்டி வலசை சேர்ந்த முருகேசன் மகன் சசிக்குமாரும் நண்பர்களா என்றால், இல்லை. ஒவ்வொரு வாய்தாவிற்கும் உங்களுடன் அவர் நீதிமன்றம் வருகிறார் என்றால், இல்லை. இன்றைக்கு சசிக்குமார் மனைவி வந்துள்ளார் என்றால், இல்லை. நீதிமன்றத்திற்கு வெளியே நானும்,

சசிக்குமார் மனைவியும் பேசிக்கொண்டிருந்தோம், வழக்கிற்காக இல்லை என்று பொய் சொல்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல. சசிக்குமாரின் தூண்டுதலின் பேரில் தான் பிரதிவாதியின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. 2022-ம் ஆண்டிலிருந்து சசிக்குமாரை எனக்கு தெரியும். பிரதிவாதியை 5, 6 வருடங்களாக எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் இல்லை. தொழில் ரீதியாக அவர் எனக்கு பழக்கம், நண்பர் இல்லை. டையிங் மில்லுக்கு நாங்கள் நூல் கொடுப்பது வழக்கம், அவ்வாறு நான் அங்கு சென்றபோது, பிரதிவாதி எனக்கு பழக்கம். டையிங் மில் பெயர் எனக்கு தெரியாது, பிரதிவாதியை எப்போது நான் பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நேரம், காலம் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி தொழிலை நிறுத்தி பல வருடங்கள் ஆகிவிட்டது என்றாலும், வழக்கிற்காக டையிங் மில்லில் அவரை சந்தித்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல. சூரம்பட்டி வலசில் தொழில் செய்து வருவதாக என்னிடம் கூறியுள்ளார், நேரில் சென்று நான் பார்க்கவில்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**